## மேற்கண்ட அனைத்துப் பதவிகளுக்குமான பொதுவான அறிவுறுத்தல்கள்:

- ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:
  - ✓ இலங்கைக் பிரசையாக இருத்தல் வேண்டும்.
  - ✓ பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கு உடல் மற்றும் உள ரீதியான தகைமை உடையவராக இருத்தல் வேண்டும்.
  - ✓ தீவின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கான திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.
  - ✓ நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

- தேவையான தகவல்களை உள்ளடக்காமல் சமர்ப்பிக்கப்படும் எத்தகைய விண்ணப்பமும் நிராகரிக்கப்படும்.

- விண்ணப்பம் இடப்பட்டுள்ள கடித உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பத்தில் தரப்பட்டுள்ள (குறிப்பு இலக்கம்) தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். தற்போது அரசாங்க அல்லது பகுதியளவு அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை உரிய நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தினால் வழங்கப்பட்டுள்ள விண்ணப்ப மாதிரிக்கு ஏற்ப உரியவாறு பூர்த்தி செய்தல் வேண்டும்.

- ஒன்றுக்கும் மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பதாக இருப்பின், ஒவ்வொரு பதவிக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அனைத்துத் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

- விண்ணப்பதாரர்கள் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தினால் நியமிக்கப்பட்ட நேர்முகத் தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வின் முடிவுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

- இப்பதவிகள் நிரந்தரமானதுடன் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதி ஆகியவற்றுக்கான பங்களிப்பு வழங்கப்படும்.

- முறையாகப் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- ஆட்சேர்ப்புத் தொடர்பான இறுதி முடிவு தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்திற்குரியதுடன், ஆட்சேர்ப்புச் செயற்பாட்டுடன் தொடர்புடைய எத்தகைய முடிவெடுக்கும் உரிமையும் தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகத்தின் ஆளுகைச் சபையின் வசமானதாகும்.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2026 ஒக்டோபர் 12** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும்:

**தவிசாளர், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்கத்துக்கான அலுவலகம், இலக்கம் 40, R மாடி, புத்கமுவ வீதி, ராஜகிரிய.**

தவிசாளர்,
தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகம்.